**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி**
**சேலம் மாவட்டம்.**

முன்னிலை – திரு. D. சிவக்குமார், B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,
2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07–ம் நாள் வெள்ளிக்கிழமை
ஸ்ரீபராபவ ஆண்டு ஆடி மாதம் 22–ம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் – 224/2026**

**CNR No. TNSA09-001211-2026**

தமிழ்நாடு அரசுக்காக,
(State of Tamil Nadu, Rep. by,)
காவல் உதவி ஆய்வாளர்,
மகுடஞ்சாவடி காவல் நிலையம்,
குற்ற எண்.06/2026 ..... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1) திரு. முருகன் (27/2026),
த/பெ. கிரண்,
க.எண்.400, அன்னை சத்யா நகர்,
ஆலம்பாளையம்,
திருச்செங்கோடு தாலுக்கா,
நாமக்கல் மாவட்டம். ..... எதிரி

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:53:40 +0530

| S. No | Name of the P.S and Cr.No of the Offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commencement of Trail | closure of Trial | Service of Copy Judgment or finding on accused | Sentence or order | Explanation of Delay |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 1 | Magudanchavadi P.S Cr.No. 06/2026 | Murugan | Kiran | -- | 400, Annai Sathya Nagar, Alampalayam, Tiruchengode Taluk, Namakkal District. | 27/2026 | 06.01.2026 | 07.01.2026 | 04.02.2026 | 04.02.2026 (Station Bail) | N.A | 21.07.2026 | 07.08.2026 | 07.08.2026 | 07.08.2026-Conviction | Nil |

| SI. No. | Particulars | Details |
|---|---|---|
| I. | Period of Remand of Accused | Nil (Station bail) |
| II. | Date of filing of Final Report in Court | 07.07.2026 |
| III. | Date of questioning of accused under section 230 B.N.S.S | 15.07.2026 |
| IV. | Filing of Miscellaneous petitions and their result | 1. Petition under Section 239 Cr.P.C./ 262 of B.N.S.S filed and allowed vide C.M.P.No. 01/2026, dated 15.07.2026<br>2. Petition under Section 311 Cr.P.C./ 348 of B.N.S.S filed and allowed vide C.M.P.No. 06/2026, dated 23.07.2026 |
| V. | Date of examination in chief and cross-examination of witnesses | Witness / Chief / Cross:<br>PW1 – 21.07.2026 – 21.07.2026<br>PW2 – 21.07.2026 – 21.07.2026<br>PW3 – 23.07.2026 – 23.07.2026 |
| VI. | Date of examination of accused under section 351(1)(b) of B.N.S.S | 31.07.2026 |
| VII. | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay by superior Court and the result thereof | Nil |

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 21.07.2026 | 21.07.2026 |
| PW2 | 21.07.2026 | 21.07.2026 |
| PW3 | 23.07.2026 | 23.07.2026 |



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:53:46 +0530

| | | |
|---|---|---|
| **IX.** | Final Order | In the result, Accused is found guilty and convicted under Section 271(2) B.N.S.S. for the offence under Section 281 B.N.S. imposed to pay a fine of Rs. 1000/-(Rupees One Thousand Only) and on default to suffer one month simple imprisonment. Accused is found guilty and convicted under Section 271(2) B.N.S.S. for the offence under Section 125(b) B.N.S. and imposed to pay a fine of Rs. 3000/-(Rupees Three Thousand Only) and on default to suffer one month simple imprisonment. |

**<u>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI</u>**

**JUDGMENT IN C.C. NO. 224 OF 2026 ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI.**

**PRESENT: Thiru. D. Sivakumar, B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**
**Judicial Magistrate No.II, Sankari**
**(Friday, Dated: 07th day of August 2026)**

| | |
|---|---|
| Complainant | Sub Inspector of Police, Magudamchavadi P.S. |
| Accused | Mr. Murugan (27/2026) S/o.Kiran. |
| Offences | Under section 281, 125(b) B.N.S. |
| Finding | Accused is found guilty and convicted under Section 271(2) B.N.S.S. for the offences under Section 281, 125(b) B.N.S. |
| Sentence | In the result, Accused is found guilty and convicted under Section 271(2) B.N.S.S. for the offence under Section 281 B.N.S. imposed to pay a fine of Rs. 1000/-(Rupees One Thousand Only) and on default to suffer one month simple imprisonment. Accused is found guilty and convicted under Section 271(2) B.N.S.S. for the offence under Section 125(b) B.N.S. and imposed to pay a fine of Rs. 3000/-(Rupees Three Thousand Only) and on default to suffer one month simple imprisonment. |

இவ்வழக்கானது கடந்த 07.07.2026–ஆம் தேதி இந்நீதின்றத்தில் C.C.No.224/2026–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 07.08.2026–ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. ஆகாஷ்,** அவர்கள் முன்னிலையாகியும்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:53:52 +0530

இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இன்று வழங்குகின்ற

**தீர்ப்புரை**

**1.** கடந்த 06.01.2026–ந் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு அ.சா.1 யுகேஸ்குமார் என்பவர் TN 34 H 5754 என்ற Electric மோட்டார் சைக்கிளை மகுடஞ்சாவடி காவல்நிலைய சரகம் கோவை – சேலம் தேசிய நெடுஞ்சாலையில் மகுடஞ்சாவடி பாலத்தில் ரோட்டின் இடதுபுற ஓரமாக ஓட்டி சென்றபோது எதிரி முருகன் என்பவர் TN 10 AW 2502 என்ற Ford காரை அதே திசையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து யுகேஸ்குமாரை முந்தி செல்லும்போது, காரின் வலது பக்கத்தால் யுகேஸ்குமாரின் மோட்டார் சைக்கிளின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது சட்டப்பிரிவு 281 B.N.S.–ன் படி தண்டிக்கத்தக்க குற்றமாகும்.

**1. (a).** மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி முருகன் என்பவர் ஏற்படுத்திய விபத்தினால் யுகேஸ்குமாருக்கு இரண்டு பல்லை உடைத்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியது சட்டப்பிரிவு 125 (b) B.N.S.–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம். எனவே, எதிரி முருகன் மீது சட்டப்பிரிவுகள் 281, 125 (b) B.N.S.–வின் படியும், தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்ததாக மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி குற்ற அறிக்கையை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து எதிரி மீது சட்டப்பிரிவு 281, 125 (b) B.N.S.–ன் கீழ் புலன்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:00 +0530

கொள்ளக்கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் பிரிவு 230 of B.N.S.S–ன் கீழ் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கி எதிரியிடம் குற்றம் பற்றி விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எதிரி மீதான முதற்நோக்கிலான குற்றத்திற்கு போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது சட்டப்பிரிவு 281, 125 (b) B.N.S.–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, அவரிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**3.** அரசுத்தரப்பில், இவ்வழக்கில், பட்டியல் சாட்சிகள் 3 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரிக்க வேண்டியதில்லை என்று கற்றறிந்த உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளனர். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த **பட்டியல் சாட்சி 7 – ஜீவிதா, காவல் உதவி ஆய்வாளர்,** அவர்கள் வேறு பணியில் சென்றுவிட்டதால் அவருக்கு பதிலாக **திரு. மயில்கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,** அவர்களை அரசுதரப்பு பட்டியலில் கூடுதல் சாட்சியாக சேர்ப்பதற்காக பிரிவு 348 of B.N.S.S–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் ஒப்புதல் பெற்ற பின்னர், அரசுத்தரப்பு சாட்சி 3–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அத்துடன் அரசுத்தரப்பு சாட்சி விசாரணையானது முடிக்கப்பட்டது.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:07 +0530

4. அரசுத்தரப்பில், சாட்சியாக அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அரசுத்தரப்பு சாட்சியங்கள் விசாரித்து முடித்த பின்பு, அதனைப் படித்து காண்பித்து பிரிவு 351(1)(b) B.N.S.S–ன் படி கேள்விகள் கேட்டபோது, எதிரி அதனை பொய்சாட்சியம் என்றும், பொய்வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

6. எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ விசாரணை செய்து குறியீடு செய்யப்படவில்லை.

7. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றின் மூலமாக அரசுத்தரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதாகவும், எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று அரசுதரப்பில் வாதிடப்பட்டது.

Chart for Witnesses Examined:

| Prosecution Witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| அ.சா.1 | திரு. யுகேஷ்குமார் | புகார்தாரர். இவ்வழக்கு குற்றசம்பவத்தில் காயமுற்ற நபர். இவ்வழக்கு குற்ற |



SIVAKUMAR D Digitally signed by SIVAKUMAR D Date: 2026.08.07 15:54:15 +0530

| | | |
|---|---|---|
| | | சம்பவத்தை பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.2 | திரு. சக்திவேல் | குற்றச்சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. இவ்வழக்கு குற்றச்சம்பவத்தைப் பற்றிக் கூறும் சாட்சி. |
| அ.சா.4 | திரு. மயில்கணேசன் – சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் | இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஜீவிதா, இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த விபரத்தைப் பற்றி கூறும் சாட்சி |

<u>Chart for Exhibited Documents:</u>

| Exhibit No. | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | விபத்து பதிவேடு | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | காயச்சான்று | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | TN 10 AW 2502 என்ற Ford வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.9 | TN 34 MB 5754 என்ற OLA Electric வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை | அ.சா.3 |

**8. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில், எதிரி தான் வழக்கு குற்றச் சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:24 +0530

**விபரத்தை அரசுத்தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தின் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்ற காரணத்தினால் எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.**

**9.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத்தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட சட்டப்பிரிவுகள் 281, 125 (b) B.N.S.–ன் கீழ் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள், தங்களின் முதல் விசாரணையின் போது, கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளனர்:</u>**

**10. (a). அ.சா.1. திரு. யுகேஷ்குமார்,** தனது முதல் விசாரணையில், "1. நான் நாமக்கல் மாவட்டம், எலந்தகுட்டை, காரைக்காட்டில் குடியிருந்து சீரகாபாடியில் உள்ள ZOHO ஐடி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியை நான் பார்த்தால் அவரை என்னால் அடையாளம் காட்ட இயலும் (எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது). கடந்த 06.01.2026ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் வேலைக்கு செல்ல எனக்கு சொந்தமான TN 34 5754 எலக்ட்ரிக் பைக்கில் கோவை – சேலம் NH ரோட்டில் மகுடஞ்சாவடி பாலத்தில் ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, எனது பின்னால் வந்த TN 10 AW 2502 என்ற Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி எனது வாகனத்தை முந்தி செல்ல முயன்று எனது இருசக்கர வாகனத்தின் மீது



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:31 +0530

மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார்.

2. மேற்படி விபத்தில் எனக்கு வலதுபக்க புருவம், கீழ்தாடை, வலதுபக்கம் முழங்கை மற்றும் பெருவிரலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் என்னை ஆம்புலன்ஸ் மூலம் மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். சேலம் SKS மருத்துவமனையில் எனது நண்பன் கவின் உதவியுடன் மேல்சிகிச்சைக்காக சென்றேன். எனக்கு விபத்து ஏற்படுத்திய நபர் பள்ளிபாளையம், அன்னை சத்யா நகரை சேர்ந்த முருகன் என்று தெரிந்து கொண்டேன். விபத்து தொடர்பாக சிகிச்சையில் இருந்த என்னிடம் மகுடஞ்சாவடி போலீசார் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(b). அ.சா.2. திரு. சக்திவேல்,** தனது முதல் விசாரணையில் " 1) நான் நாமக்கல் மாவட்டம், எலந்தகுட்டை, காரைக்காட்டில் குடியிருந்து ஜவுளி தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியை நான் பார்த்தால் அவரை என்னால் அடையாளம் காட்ட இயலும் (எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது). கடந்த 06.01.2026 ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் காகாபாளையம் செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, எனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனமான TN 34 MB 5754 எலக்ட்ரிக் பைக் கோவை –



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:37 +0530

சேலம் NH ரோட்டில் மகுடஞ்சாவடி பாலத்தில் ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது, பின்னால் வந்த TN 10 AW 2502 என்ற Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி இருசக்கர வாகனத்தை முந்தி செல்ல முயன்று இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார்.

2) மேற்படி விபத்தில் அ.சா.1–க்கு வலதுபக்க புருவம், கீழ்தாடை, வலதுபக்கம் முழங்கை மற்றும் பெருவிரலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலம் மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அ.சா.1–யை அனுப்பி வைத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10. (c). அ.சா.3. திரு.மயில்கணேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், தனது முதல் விசாரணையில்,** "1) நான் தற்போது சேலம் மாவட்ட மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த காவல் உதவி ஆய்வாளர் ஜீவிதா வேறு பணியில் சென்றுவிட்டதால், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 07.01.2026ம் தேதி 16.00 மணிக்கு, நிலைய அலுவலில் காவல் உதவி ஆய்வாளர் ஜீவிதா இருந்தபோது, சேலம் SKS மருத்துவமனையில் இருந்து யுகேஷ்குமார் என்பவரின் சாலைவிபத்து காயதகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:43 +0530

சிகிச்சையில் இருந்த அ.சா.1 யுகேஷ்குமார் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுவந்ததன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ததில் குற்ற எண். 06/2026 ஆக சட்டபிரிவுகள் 281, 125(a) BNS ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். மேலும் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகாருடன் இணைத்து, கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டுள்ளார். **(மேற்சொன்ன முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர், இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லோகேஷ், அங்கமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, அவர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சாட்சி சக்திவேல், ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) இவ்வழக்கில் காயம்பட்ட யுகேஷ்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த SKS மருத்துவமனை மருத்துவர் திரு.சசிகுமார் என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டு மற்றும் காயச்சான்றினை பெற்றுள்ளார். மேற்படி சான்றில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று அளித்துளளார். இது தொடர்பாக வாக்குமூலம் பதிவு



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:49 +0530

செய்துள்ளார். **(மேற்சொன்ன விபத்துபதிவேடு மற்றும் காயச்சான்று முறையே அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) காயம்பட்ட யுகேஷ்குமார் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் வழக்கின் சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNS லிருந்து 281, 125(b) BNS ஆக மாற்றம் செய்து எதிரி மீது சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(மேற்சொன்ன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர், இவ்வழக்கில் எதிரியை 04.02.2026ம் தேதி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6) மேலும், கடந்த 06.01.2026ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 10 AW 2502 என்ற பதிவு எண் கொண்ட Ford வாகனத்தை சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளார். மேலும் விபத்துக்குள்ளான வாகனமான TN 34 MB 5754 என்ற பதிவெண் கொண்ட OLA Electric Vehicle வாகனத்தை சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளார். பின்னர், மோட்டார் வாகன ஆய்வாளர், சங்ககிரி திரு.செந்தில்குமார் என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றும், அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7) இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 07.04.2026ம் தேதி, சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழ் குற்ற



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:54:55 +0530

இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில், எதிரி தான் வழக்கு குற்றச் சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற விபரத்தை அரசுத்தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தின் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்ற காரணத்தினால் எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.**

மேற்படி எதிரியின் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆய்வு செய்து, தீர்மானிக்கிறது:

**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:**

**11. (a).** அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் என்ற நிலையில் அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 06.01.2024– அன்று காலை சுமார் 9.00 மணியளவில் தான் TN 34 5754 பதிவெண்கொண்ட எலக்ட்ரிக் பைக்கில் கோவை – சேலம் NH ரோட்டில் மகுடஞ்சாவடி பாலத்தில் ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது தனக்கு பின்னால் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் TN 10 AW 2502 என்ற பதிவெண்கொண்ட Ford கார் தன்னை முந்தி செல்லும் போது, தனது வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், அதில் தனக்கு வலது பக்க புருவம், கீழ்தாடை, வலதுபக்கம் முழங்கை மற்றும் பெருவிரலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும், அதனால், தான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், அது சமயம், சம்பவம்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:01 +0530

குறித்து, அங்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11. (b).** அ.சா.2 இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி என்ற நிலையில், அ.சா.2, தனது முதல் விசாரணையில், கடந்த 06.01.2024–அன்று காலை சுமார் 9.00 மணியளவில், தான் காகாபாளையம் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றபோது, தனக்கு முன்பு TN 34 MB 5754 என்ற பதிவெண் கொண்ட வாகனம் தனக்கு முன்பாக சென்று கொண்டு இருந்ததாகவும், அப்போது, TN 10 AW 2502 என்ற Ford கார் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வந்து மேற்சொன்ன இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதனால் அ.சா.1–க்கு வலது பக்க புருவம், கீழ்தாடை, வலதுபக்கம் முழங்கை மற்றும் பெருவிரலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11. (c).** அ.சா.1 தனது முதல்விசாரணையில் அளித்துள்ள சாட்சியம் அவர் அளித்த புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1–ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுடன் பொருந்துகிறது (Corroborated). அ.சா.2–அளித்துள்ள சாட்சியம் அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்துடன் பொருந்துகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.2 இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் சமயத்தில் இந்நீதிமன்றத்தில் எதிரி ஆஜரில் இல்லாத காரணத்தினால், தங்களால் எதிரியை அடையாளம் காட்ட இயலும் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் எதிரி, அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியம் அளிக்கும் அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பாரேயானால்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:06 +0530

அ.சா.1 மற்றும் அ.சா.2 இவ்வழக்கின் எதிரியை அடையாளம் காட்டியிருப்பார்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. (d).** அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இரு சாட்சிகளும் தங்களது சாட்சியத்தில் எதிரி சம்பவ சமயத்தில் தனது TN 10 AW 2502 என்ற Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்சொன்ன சாட்சியம் அ.சா.ஆ.1–புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுடன் பொருந்துகிறது. எனவே, எதிரி சம்பவ சமயத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் தனது வாகனத்தை இயக்காமல் இருந்தாரேயானால், இவ்விபத்து சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. (e).** அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள், விபத்தினால் அ.சா.1 –க்கு வலது பக்க புருவம், கீழ்தாடை, வலதுபக்கம் முழங்கை மற்றும் பெருவிரலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.ஆ.5– விபத்துப்பதிவேடு மற்றும் அ.சா.ஆ.6– காயச்சான்று இந்நீதிமன்றம் ஆய்வு செய்ததில் அ.சா.1–க்கு சம்பவ சமயத்தில் வலது பக்க புருவம், கீழ்தாடை, முழங்கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டுள்ள விவரம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், மேற்சொன்ன காயம் கொடுங்காயம் என்று அ.சா.1–க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மேற்சொன்ன ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது முதல் விசாரணையில் அ.சா.1–க்கு ஏற்பட்டதாக சாட்சியம்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:13 +0530

அளித்த காயத்தின் விவரங்கள், அ.சா.ஆ.5– விபத்துப்பதிவேடு மற்றும் அ.சா.ஆ.6– காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள விவரத்துடன் பொருந்துகிறது. மேலும், அ.சா.1–க்கு விபத்தினால் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்ற விவரம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**11. (f).** அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9– மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகளை இந்நீதிமன்றம் பரிசீலித்தபோது, சம்பவ நாளன்று TN 10 AW 2502 என்ற பதிவெண் கொண்ட Ford காரின் இடது பக்க கதவு ஒடுங்கியுள்ள விவரமும், TN 34 MB 5754 என்ற பதிவெண் கொண்ட எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிளின் முன் சக்கர Break lever பாதிப்பு அடைந்துள்ள விவரமும், பின்புற வலது பக்க ரெஸ்ட் சேதமடைந்துள்ள விவரமும், மற்றும் மேற்சொன்ன வாகனத்தில் கண்ணாடிகள் உடைந்துள்ள விவரமும், மேற்சொன்ன இரு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் பரிசோதித்த விவரமும், மேற்சொன்ன விபத்தின் காரணமாக மேற்சொன்ன இரு வாகனங்களும், எந்தவொரு இயந்திர கோளாறு காரணமாக விபத்து ஏற்படவில்லை என்ற விவரமும், மேற்சொன்ன ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்சொன்ன விபத்து வாகனங்களின் இயந்திர கோளாறால் ஏற்பட்டது அல்ல என்றும், மேலும், மேற்சொன்ன இரு வாகனங்கள் தான் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது என்று இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**11. (g).** அ.சா.3, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்த விவரத்தை பற்றியும்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:20 +0530

இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1–க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்றுகளை பெற்ற விவரத்தையும், மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து அவரிடம் இருந்து இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்ற விவரத்தை பற்றியும், இவ்வழக்கில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பெற்று இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரத்தை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1–க்கு விபத்து சம்பவத்தில் ஏற்பட்டுள்ள காயம் கொடுங்காயம் என்றும், மேற்சொன்ன காயம் இவ்வழக்கின் எதிரி சம்பவ சமயத்தில் தனது Ford காவாகனத்தினை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், ஓட்டியதால், ஏற்பட்ட விபத்தின் காரணமாகத்தான், ஏற்பட்டது என்று அளித்துள்ள சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. (h).** எதிரியின் தரப்பில் அரசுத்தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை மேற்கொண்டபோதிலும், மேற்சொன்ன குறுக்கு விசாரணையின் மூலம் எதிரி தனது வாகனத்தினை அஜாக்கிரதையாகவோ, அதிவேகமாகவோ, இயக்கவில்லை என்ற விவரத்தை எதிரியின் தரப்பு இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தாத நிலையிலும், எதிரி மேற்சொன்ன வாகனத்தை சம்பவ சமயத்தில் இயக்கவில்லை என்று குறிப்பிட்டு கேள்வி எழுப்பாத நிலையிலும், அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை பொய்பிக்கும் வகையில் எதிரிகளின் குறுக்கு விசாரணை அமையப்பெறவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:26 +0530

**11. (i).** எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தையும் சான்றாவணங்களையும் இந்நீதிமன்றம் பகுப்பாய்வு செய்ததில், சம்பவ சமயத்தில் இவ்வழக்கின் எதிரி தான், TN 10 AW 2502 என்ற Ford காரை ஓட்டியுள்ளார் என்ற விவரமும், மேற்சொன்ன எதிரி சம்பவ சமயத்தில் தனது Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டிச்சென்றதின் காரணமாகத்தான் இவ்வழக்கு விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது என்பதையும், மேற்சொன்ன விபத்தினால் தான் அ.சா.1 – க்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்ற விவரத்தையும் அரசுத்தரப்பு ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சாட்சியம் அளித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.(j).** எனவே, இவ்வழக்கின், எதிரி மீது வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 281, 125(b) B.N.S.–ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, இவ்வழக்கின், எதிரியை சட்டப்பிரிவுகள் 281, 125(b) B.N.S.–ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11 (k).** முடிவாக, மேலே ஆராய்ந்த வகையில், இவ்வழக்கின் எதிரியை சட்டப்பிரிவுகள் 281, 125(b) B.N.S.–ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவருக்கு கொடுக்க போகும் தண்டனை குறித்து சட்டப்பிரிவு 271(2) B.N.S.S.–ன் கீழ் அவர்களிடம் வினவிய போது, எதிரி " நான் முதல் முறை குற்றவாளி, என் குடும்பம் ஏழ்மை நிலையில் உள்ளது. நான் இனிமேல் இதுபோன்ற தவறை செய்யமாட்டேன்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:33 +0530

என்னை மன்னித்து விடுங்கள்" என்று மேற்சொன்ன எதிரி கூறியுள்ளார்.

**13.** மேற்படி குற்றத்தின் தன்மையினையும், எதிரியின் விளக்கத்தை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் எதிரி சட்டப்பிரிவுகள் 281, 125(b) B.N.S.–ன் கீழ் குற்றம் புரிந்துள்ள காரணத்தினாலும் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ள காரணத்தினாலும், இவ்வழக்கின் எதிரியை சட்டப்பிரிவு 401- B.N.S.S.–ன் கீழ் நன்னடத்தையின் அடிப்படையில் (Probation of Offenders Act) விடுவிக்கலாகாது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**13.(a).** மேற்சொன்ன எதிரியின் தண்டனை காலம் குறித்து கேட்கப்பட்ட கேள்வியின் பதிலை இந்நீதிமன்றம் பரிசீலித்தும், அரசுத்தரப்பில், இவ்வழக்கின் எதிரியின் மீது ஏற்கனவே குற்ற வழக்கு இருப்பதாகவோ, அல்லது அவ்வழக்கில் இவ்வழக்கின் எதிரி தண்டனை பெற்றதாகவோ தெரிவிக்காத நிலையில், இக்குற்றம் தான் எதிரியின் மீதுள்ள முதல் குற்றம் என்று இந்நீதிமன்றத்திற்கு தெரியவருவதாலும், இவ்வழக்கின் எதிரி இதுபோன்ற குற்றத்தில் இதற்கு முன்னர் ஈடுபடவில்லை என்ற காரணத்தின் அடிப்படையிலும், இவ்வழக்கில் எதிரி தான் செய்த தவறை உணர்ந்து திருந்தி வாழ ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என்ற காரணத்தினாலும், அவரின் குடும்ப சூழ்நிலைகளை கருத்தில்கொண்டும், குற்றத்திற்கு தண்டனை விதிப்பது என்பது குற்றவாளியை நெறிமுறைப்படுத்த மட்டுமே என்ற நோக்கத்தை இந்நீதிமன்றம் கருத்தில்கொண்டும், மேற்சொன்ன



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:41 +0530

விபரங்களை, சிறப்பு காரணங்களாக கருதி, எதிரி செய்த குற்றத்திற்கு அபராதம் மட்டும் விதித்து தீர்ப்பளிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13(b).** எனவே, மேற்சொன்ன இவ்வழக்கின் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டான சட்டப்பிரிவு 281 B.N.S.–ன் கீழ் அவர் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிக்கு ரூபாய் 1000/– அபராதம் விதித்தும் அதை கட்ட தவறினால் ஒரு மாத காலம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டான சட்டப்பிரிவு 125(b) B.N.S.–ன் கீழ் அவர் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிக்கு ரூபாய் 3000/– அபராதம் விதித்தும் அதை கட்ட தவறினால் ஒரு மாத காலம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் சட்டப்பிரிவு 271(2) B.N.S.S.– சட்டப்பிரிவின் கீழ் தண்டனை வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**14.** இவ்வழக்கில், வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**15.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது, எதிரி பிணையில் சென்றுள்ளனர். இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் குற்றம் சாட்டப்பட்ட நபர் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் 07–ம்



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:48 +0530

நாள் வெள்ளிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:55:54 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

**<u>பின் இணைப்பு</u>**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:</u>**

| அரசுத்தரப்பு சாட்சிகளின் வரிசை எண் | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | திரு. யுகேஷ்குமார் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. சக்திவேல் |
| அ.சா.3 | திரு. மயில்கணேசன் – சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்</u>:**

| அரசுதரப்பு சான்றாவணங்–களின் வரிசை | தேதி | அரசுதரப்பு சான்றாவணங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.01.2026 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 07.01.2026 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 07.01.2026 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 07.01.2026 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 06.01.2026 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.6 | 14.01.2026 | காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 07.04.2026 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.8 | 04.02.2026 | TN 10 AW 2502 என்ற Ford வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 | 21.01.2026 | TN 34 MB 5754 என்ற OLA Electric வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை |

<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருள்கள்</u>: – இல்லை–

<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : –இல்லை–

<u>பிற்சேர்க்கை:</u>

1) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.

2) வழக்கு விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை

3) வழக்கின் முடிவு அரசுத்தரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

4) வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) முடிவில், எதிரிக்கு சட்டப்பிரிவு 281 B.N.S. சட்டப்பிரிவு 271(2) B.N.S.S.–ன் படி தண்டனை வழங்கியும் மற்றும் சட்டப்பிரிவு 125(b) B.N.S. சட்டப்பிரிவு 271(2)– B.N.S.S.–ன் படி தண்டனை வழங்கியும், இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.07 15:56:03 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

Judgment uploaded online on 07.08.2026.

**CC 224/2026**